*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.07*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Issue DOI: https://doi.org/10.63300/tm07042026

# Bullock Cart Racing: A Study of the Traditional Sports of Northern Sri Lankan Tamils

**Niththiyanantham Thiruchselvam***,
Postgraduate Student, Department of Archaeology, University of Kerala
*Correspondence: thiruselvamthiru524@gmail.com

**Article Info**
Received on 23-Mar-2026, Revised on 27-Mar-2026, Accepted on 27-Mar-2026, Published on 01-April-2026

## ABSTRACT

Heritage is an invaluable asset that identifies the unique identity of every ethnic group. It acts as a dialogue between people of the past and the present, helping to determine and guide the future. While diverse ethnic groups exist globally, the heritage aspects of Tamils remain distinct. Among them, Bullock Cart Racing holds significant importance as a traditional sport closely linked to the rural lifestyle and social traditions of Northern Sri Lankan Tamils. Initially, bullock carts were utilized for daily transportation and agricultural activities; however, over time, they evolved into a rural sport integrated with village festivals and celebrations. This sport is regarded as a cultural event that manifests heroism, a competitive spirit, and social unity. The objective of this study is to examine the historical development, socio-cultural significance, and contemporary status of bullock cart racing as one of the traditional sports of Northern Sri Lankan Tamils. The hypothesis posits that bullock cart racing serves as a vital traditional sport reflecting the rural cultural identity and social cohesion of the Northern Sri Lankan Tamil community. Primary and secondary data were utilized for this research. Primary data were collected through field observations and interviews with relevant individuals. This historical and descriptive study also incorporates secondary data such as literature and research articles in both Tamil and English. In conclusion, while bullock cart racing is deeply intertwined with the rural culture and traditional lifestyle of Northern Sri Lankan Tamils, it is noteworthy that modernization and social shifts are bringing significant changes to its practice.

***KEYWORDS:*** *Northern Sri Lanka, Bullock Cart Racing, Traditional Sports, Tamil Culture.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.07*

# வட இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் மாட்டுவண்டிச் சவாரி –ஓர்ஆய்வு.

***நித்தியானந்தம் திருச்செல்வம்,**
முதுகலைமாணி மாணவன் தொல்லியல்துறை,
கேரளாப் பல்கலைக்கழகம்.

**ஆய்வுச்சுருக்கம் :**

மரபுரிமை என்பது ஒவ்வொரு இனக்குழுவின் தனித்துவத்தை அடையாளப்படுத்திக் காட்டும் விலைமதிக்க முடியாத சொத்து இது கடந்தகால மக்களிற்கும் நிகழ்கால மக்களிற்கும் இடையிலான உரையாடல் விடயமாக செயற்பட்டு எதிர்காலத்தை தீர்மானிக்கவும் வழிநடத்தவும் உதவுகின்றது. உலகளவில் பல்வேறுப்பட்ட இனக்குழுக்கள் காணப்பட்டாலும் தமிழரின் மரபுரிமைசார் அம்சங்கள் தனித்துவம் வாய்ந்தவையாக காணப்படுகின்றன. அவற்றுள் வட இலங்கை தமிழர்களின் கிராமிய வாழ்க்கை முறையுடனும் சமூக மரபுகளுடனும் நெருங்கிய தொடர்புடைய பாரம்பரிய விளையாட்டாக மாட்டுவண்டிச் சவாரி முக்கியத்துவம் பெறுகின்றது. ஆரம்பகாலங்களில் மாட்டுவண்டி மக்களின் அன்றாட போக்குவரத்து தேவைகளுக்கும் விவசாய நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்பட்டதுடன், காலப்போக்கில் கிராமிய திருவிழாகக்ள் மற்றும் கிராமிய கொண்டாட்டங்களுடன் இணைந்த கிராமிய விளையாட்டாக வளர்ச்சி பெற்றது. இவ்விளையாட்டு வீரஉணர்வு, போட்டிமனப்பாங்கு மற்றும் சமூக ஒற்றுமையை வெளிப்படுத்தும் கிராமிய பண்பாட்டு நிகழ்வாக கருதப்படுகின்றது. மாட்டுவண்டிச் சவாரி பற்றிய இவ்வாய்வின் நோக்கமாக வட இலங்கை தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான மாட்டுவண்டிச் சவாரியின் வரலாற்று வளர்ச்சிஇ அதன் சமூக மற்றும் பண்பாட்டு முக்கியத்துவம் மற்றும் இன்றைய நிலையை ஆராய்தல் காணப்படுகின்றது. ஆய்வின் கருதுகோளாக மாட்டுவண்டிச் சவாரி வட இலங்கை தமிழர்களின் கிராமிய பண்பாட்டு அடையாளத்தையும் சமூக ஒற்றுமையையும் பிரதிபலிக்கும் முக்கிய பாரம்பரிய விளையாட்டாக விளங்குகிறது என்பதை முன்வைக்கின்றது. ஆய்வுக்கான தரவுகளாக முதன்நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள்; பயனப்டுத்தப்படுகின்றன. முதன்நிலைத் தரவுகள் களப்பயண அவதானிப்புகள் மற்றும் தொடர்புடைய நபர்களுடனான நேர்காணல்கள் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இலக்கியம், தமிழ் மற்றும் ஆங்கில ஆய்வுக் கட்டுரைகள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகளையும் உள்ளடக்கிய வரலாற்று மற்றும் விபரண ஆய்வாக அமைகின்றது. அந்தவகையில் மாட்டுவண்டிச் சவாரியானது வட இலங்கை தமிழர்களின் கிராமிய பண்பாடு மற்றும் பாரம்பரிய வாழ்வியலுடன் நெருங்கிய தொடர்புகொண்டதாக காணப்படுவதுடன் நவீனயமாதல் மற்றும் சமூக மாற்றங்களின் தாக்கங்கள் அதன் நடைமுறையில் பல மாற்றங்களை ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**திறவுச் சொற்கள்** : வட இலங்கை, மாட்டுவண்டிச்சவாரி, பாரம்பரியவிளையாட்டு, தமிழர் பண்பாடு.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 04 (April -2026)*
**www.tamilmanam.in**
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.07*

**அறிமுகம்**

தமிழர் சமூகத்தின் வரலாறு மற்றும் பண்பாட்டு வாழ்வியலில் காளை மாடுகள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. தொன்மையான காலத்திலிருந்து மனிதனுக்கும் மாடுகளுக்கும் இடையேயான உறவு பொருளாதாரம், சமூக அமைப்பு மற்றும் ஆன்மீக நம்பிக்கைகளோடு நெருங்கிப் பிணைந்துள்ளது. குறிப்பாக விவசாயத்தை மையமாகக் கொண்ட கிராமிய வாழ்க்கையில் காளைகள் உழவு, போக்குவரத்து மற்றும் அன்றாட வாழ்வாதார நடவடிக்கைகளில் இன்றியமையாத கூறாக விளங்குகின்றன. இவ்வாறான பயன்பாட்டைத் தாண்டி, காளைகள் தமிழர் பண்பாட்டு அடையாளங்களாகவும் உருவெடுத்துள்ளன. சங்க இலக்கியங்களில் மாடுகள் செல்வம், வீர உணர்வு மற்றும் சமூக நிலையின் அடையாளமாகக் குறிப்பிடப்படுகின்றன. "ஏறு தழுவுதல்" போன்ற மரபுகள் மனிதன் மற்றும் காளைக்கு இடையேயான உறவை வீரத் தன்மையுடன் வெளிப்படுத்துகின்றன. இந்தப் பின்னணியில், மாட்டுவண்டிச் சவாரி வட இலங்கை தமிழர்களின் முக்கியமான பாரம்பரிய விளையாட்டாக விளங்குகின்றது. இது வெறும் பொழுதுபோக்கு நிகழ்வாக மட்டுமன்றி சமூக ஒற்றுமை, கிராமிய வாழ்க்கை முறை மற்றும் பண்பாட்டு மரபுகளின் வெளிப்பாடாகக் காணப்படுகின்றது. கோயில் திருவிழாக்கள் மற்றும் சமூக நிகழ்வுகளுடன் இணைந்து நடைபெறும் இவ்விளையாட்டு, மக்களிடையே ஒற்றுமையையும் உறவுகளையும் வலுப்படுத்துகின்றது. நவீனமயமாதலின் தாக்கத்திலும் இவ் விளையாட்டு தனது தனித்துவத்தையும் பாரம்பரிய மதிப்பையும் பேணிக் கொண்டிருக்கின்றது. எனவே, மாட்டுவண்டிச் சவாரியின் வரலாறு, அதன் வளர்ச்சி மற்றும் சமூகப் பங்களிப்பை ஆய்வு செய்வது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

**தமிழர் வரலாற்றில் தமிழருக்கும் மாடுகளுக்குமான உறவுநிலை**

தமிழர் வரலாற்றில் காளை மாடுகள் பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு அடையாளங்களின் முக்கிய கூறாக விளங்குகின்றன. தமிழர்களுக்கும் மாடுகளுக்கும் இடையிலான உறவு தொன்மையான காலத்திலிருந்தே தொடர்ந்து வருகின்றது. வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில் மாடுகள் வேட்டைக்குரிய விலங்குகளாக காணப்பட்டது. பின்னர் விவசாயத்தை மையமாகக் கொண்ட குடியேற்ற வாழ்க்கை உருவானபோது அவை வீட்டுவளர்ப்பு மிருகங்களாக மாற்றமடைந்தன. இந்நிலை மனித நாகரிக வளர்ச்சியின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. தொன்மையான சிந்துவெளி நாகரிக காலத்தில் மாடுகள் பொருளாதார மற்றும் சடங்கு வாழ்க்கையில் முக்கிய பங்கு வகித்தன. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட முத்திரைகள் மற்றும் சுடுமண் உருவங்களில் காளை உருவங்கள் அதிகளவில் காணப்படுவது, அவற்றின் பயன்பாட்டை வெளிப்படுத்துகின்றது. தமிழகத்தின் கீழடி அகழாய்வில் கிடைத்த எலும்புகள் மற்றும் ஏனைய சான்றுகள் கீழடி மக்களின் வாழ்வியலில் மாடுகள் முதன்மை பெற்றதைக் காட்டுகின்றது. ஈழத்தில் உள்ள கந்தரோடை போன்ற இடங்களிலும் இதற்கான தொல்லியல் ஆதாரங்கள் காணப்படுகின்றமை பண்டைய வட இலங்கைத் தமிழரிடத்தில் மாடுகள் பெற்ற

முக்கியத்துவத்தினைக் காட்டுகின்றது.

சங்ககால இலக்கியங்கள் தமிழர் சமூகத்தில் காளை மாடுகளின் பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு முக்கியத்துவத்தை தெளிவாக வெளிப்படுத்துகின்றன. புறநானூறு பாடல்களில் மாடு செல்வத்தின் அடையாளமாகக் கருதப்பட்டதுடன், ஒரு குடும்பத்தின் பொருளாதார நிலையை அளவிடும் முக்கிய அளவுகோலாகவும் இருந்தது குறிப்பிடப்படுகின்றது. போரில் வெற்றி பெற்ற பின்பு எதிரியின் மாடுகளை கைப்பற்றுதல் செல்வச் சேர்க்கையின் ஒரு வழியாக விளங்கியது. அகநானூறு பாடல்களில் கிராமிய வாழ்க்கை, மேய்ச்சல் சூழல் மற்றும் மாடுகளுடன் தொடர்புடைய இயற்கை நிலைகள் விரிவாக விவரிக்கப்படுகின்றன. இதன் மூலம் மாடுகள் அன்றாட வாழ்க்கையின் அங்கமாக இருந்ததை அறியமுடிகின்றது. சங்க இலக்கியங்களில் காளைகளின் வீரத்தன்மை மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஆண்மைக் குணங்கள் வலியுறுத்தப்படுகின்றன. கலித்தொகையில் காளைகளை அடக்கும் திறமை இளைஞர்களின் வீரத்தையும் தைரியத்தையும் வெளிப்படுத்தும் செயலாகக் காணப்படுகின்றது. “ஏறு தழுவுதல்” என்பது காளையை அணைத்து அடக்கும் பாரம்பரிய விளையாட்டாக குறிப்பிடப்படுகின்றது. இது இன்றைய ஜல்லிக்கட்டு போன்ற விளையாட்டுகளின் தொன்மையான அடிப்படையாகக் கருதப்படுகின்றது. பின்னர் பல்லவர், சோழர் மற்றும் பாண்டியர் காலங்களில் காளைகள் அரசியல் மற்றும் பொருளாதார முக்கியத்துவம் பெற்றிருந்தன. நாணயங்களில் காளைச் சின்னங்கள் இடம்பெற்றதோடு, கல்வெட்டுகள் மூலம் ஆலயங்களுக்கு மாடுகள் தானமாக வழங்கப்பட்ட செய்திகளும் அறியப்படுகின்றன. குறிப்பாக இராஜராஜ பெரும்பள்ளி கல்வெட்டுகள் போன்ற ஆதாரங்கள் சோழராட்சிக் காலத்தில் மாடுகளின் மத மற்றும் சமூக பங்களிப்பை உறுதிப்படுத்துகின்றன.

ஈழத்தின் யாழ்ப்பாண இராசதானி காலத்திலும் காளை மாடுகள் போக்குவரத்து மற்றும் விவசாய நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகித்ததுடன் அரச இலட்சனைகளிலும் இடம்பெற்றன. அக்கால நாணயங்களில் காளை உருவங்கள் காணப்படுவது அதன் அரசியல் மற்றும் பண்பாட்டு முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றது. ஐரோப்பியர் ஆட்சிக் காலத்திலும் காளை மாடுகள் உள்ளுர் போக்குவரத்தில் முக்கிய பங்கு வகித்தன. கிராமிய தலைவர்கள், வைத்தியர்கள், கல்வியாளர்கள் என சமூக அந்தஸ்து பெற்றவர்கள் தங்கள் பயணங்களிற்கு மாட்டுவண்டில்களை பயன்படுத்தியதுடன் காளைகளை பராமரிப்பதற்கு பணியாளர்களையும் வைத்திருந்தனர். அக்கால சாலைகள் மாட்டுவண்டி பயணத்திற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டிருந்தன. ஆவுரஞ்சிக்கற்கள் மற்றும் தண்ணீர் தொட்டிகள் போன்ற பாரம்பரிய கட்டமைப்புகள் இன்றளவும் காணப்படுவது சிறப்பாகும். இவை மாடுகளின் பயன்பாடு சமூக வாழ்க்கையில் ஆழமாக பதிந்திருந்ததை எடுத்துக்காட்டுகின்றது.

நவீன காலத்தில் இயந்திரமயமாதல் மற்றும் நகரமயமாதல் போன்ற பல காரணங்களால் மாடுகளின் பாரம்பரிய பயன்பாடு குறைந்து வருகின்றது. இருப்பினும் பல கிராமிய பகுதிகளில் விவசாயம், பால் உற்பத்தி மற்றும் கலாசார நிகழ்வுகளில் மாடுகள் இன்றும் முக்கிய பங்கு

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.07*

வகிக்கின்றன. குறிப்பாக மாட்டுவண்டிச் சவாரி போன்ற பாரம்பரிய விளையாட்டுகள், காளை மாடுகளின் பயன்பாட்டிலிருந்து உருவான கலாசார வெளிப்பாடுகளாகத் தொடர்ந்து நிலைத்து வருகின்றன. இவ்விளையாட்டுகள் சமூக ஒற்றுமை, வீர உணர்வு மற்றும் பாரம்பரிய அடையாளத்தை வெளிப்படுத்தும் முக்கியமான நிகழ்வுகளாக விளங்குகின்றன.

**இன்றைய தமிழர் வாழ்வியலில் காளைகளின் பங்கு**

இன்றைய காலத்திலும் காளைகள் தமிழர் சமூகத்தில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. அவை விவசாய வாழ்க்கையின் அங்கமாக மட்டுமின்றி மனிதனின் நெருங்கிய துணையாகவும் கருதப்படுகின்றன. பாரம்பரிய விவசாய முறைகளில் உழவு, வண்டி இழுத்தல் மற்றும் போக்குவரத்து போன்ற செயல்பாடுகளில் காளைகள் முக்கிய பங்காற்றுகின்றன. இதனால், அவை விவசாயிகளின் “தோழன்” எனப் பொருள்படுத்தப்படுகின்றன.

பொருளாதார ரீதியாக காளைகள் கிராமப்புற வாழ்வாதாரத்தின் முக்கிய ஆதாரமாக விளங்குகின்றன. விவசாய உற்பத்தியில் அவற்றின் பங்கு குறிப்பிடத்தக்கதாக இருப்பதுடன், காளைகளை வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் ஒரு முக்கிய பொருளாதார நடவடிக்கையாகும். இத்தகைய பரிவர்த்தனைகள் சாதாரண வர்த்தகச் செயல்பாடுகளாக இல்லாமல் நல்ல நாளைத் தேர்ந்தெடுத்து மேற்கொள்ளப்படும் மரபுசார்ந்த நடைமுறைகளாகக் காணப்படுகின்றன. காளைகளை வாங்குவோர் தமது ஜாதக நம்பிக்கைகளின் அடிப்படையில் காளைகளின் நிறம், நடை, சுழி அமைப்பு மற்றும் கொம்பின் வடிவம் போன்ற அம்சங்களைக் கருத்தில் கொண்டு தெரிவு செய்வர். “நாகபடம்” கொண்ட காளைகள் வீட்டு நலனுக்கு ஏற்றதல்ல என்ற நம்பிக்கையும் காணப்படுகின்றது. கைகளில் துணி போட்டு விலைபேசும் முறை தமிழரின் பாரம்பரிய பரிமாற்றமாக விளங்குகின்றது. அத்துடன் சவாரி வண்டில்கள் உற்பத்தி செய்வோரும் பரம்பரை ரீதியாக மேற்கொள்வதுடன் குடும்ப பொருளாதாரமும் வலுவடைகின்றன.

சமூக ரீதியாக, காளைகள் மனிதர்களுடன் நெருங்கிய உறவைப் பகிர்ந்து கொள்ளும் உயிரினங்களாகக் கருதப்படுகின்றன. காளைகளை விற்பனை செய்யும் சமயத்தில் காளைகளின் உரிமையாளர் காளைகளை வாங்க வருவோருக்கு தண்ணீர் மற்றும் வெற்றிலைபாக்கு வழங்கி அவர்களின் பண்பையும் உளவியலையும் மதிப்பீடு செய்வது குறிப்பிடத்தக்க நடைமுறையாகும். வெற்றிலைபாக்கு மெல்லும் நபர்கள் காளைகளுக்கு அதிக ஓய்வு அளிக்கும் தன்மையுடையவர்கள் என்ற நம்பிக்கை இதன் பின்னணியில் காணப்படுகின்றது. இத்தகைய நடைமுறைகள் மனிதர்கள் மற்றும் மாடுகளிற்கு இடையிலான உறவின் நம்பிக்கை மற்றும் அனுபவ அடிப்படையை வெளிப்படுத்துகின்றன. அத்துடன் காளை வாங்கும் நாள் அந்த சமூகத்தின் சிறப்புநாளாக கருதப்படுவதுடன் புதிதாக வாங்கிய காளைகளை பார்வையிட ஊர்மக்கள் திரண்டுவருவதும் குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் காளை வளப்பாளர்கள் உயர் நிலையில் மதிக்கப்படுவதுடன் சமூகத்துடன் இணைந்து செயற்படுபவராக காணப்படுவர். இவர்கள் தமிழரிடம் மறைந்துவரும் பல தனித்துவமான சொற்களை பேசுவதும் சிறப்பாகும். குறிப்பாக கந்து, நாகபடம், அச்சவாரம்,

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
**www.tamilmanam.in** *DOI:* **https://doi.org/10.63300/tm07042026.07**

நாணயக்கயிறு, நுவம், சவாரி... போன்ற பல சொற்களை குறிப்பிடமுடியும். காளை உரிமையாளரின் பெயருடன் காளைகளின் பெயரும் முன்னொட்டு பின்னொட்டு பெயராக அழைக்கப்பட்டும் வருகின்றன. காளைகள் விற்பனையில் இடைத்தரகர்கள் முதன்மை பெறுவதுடன் பல இடங்களை அறிந்த நபராக சமூகத்தில் காணப்படுவர்.

சமயம் மற்றும் ஆன்மீக ரீதியாக, காளைகள் தமிழர் வாழ்க்கையில் தெய்வீகத்துடனும் நம்பிக்கைகளுடனும் இணைந்த முக்கிய உயிரினங்களாகக் கருதப்படுகின்றன. இந்து சமயத்தில் நந்தி வழிபாடு முக்கியத்துவம் பெறுவது இதற்குச் சான்றாகும். நந்தி சிவபெருமானின் வாகனமாகக் கருதப்படுவதால் புனிதமான உயிரினமாக மதிக்கப்படுகின்றது. ஆலய திருவிழாக்களில் பண்டமெடுத்தல், சுவாமி ஊர்வலம் போன்ற நிகழ்வுகள் மாட்டுவண்டில்களின் மூலம் நடைபெறுவது இந்த ஆன்மீகப் பிணைப்பை வெளிப்படுத்துகின்றது. வீடுகளின் வாசல்களில் காளை உருவச் சிலைகள் வைக்கப்படுவது பாதுகாப்பு மற்றும் செழிப்பு குறியீடாகக் கருதப்படுகின்றது. காளைகள் கட்டப்படும் இடங்களும் சமய மரபுகளுக்கு ஏற்ப அமைக்கப்படுகின்றன.

குடும்ப வாழ்க்கையிலும் காளைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. வீட்டு சுப நிகழ்வுகளிலும் அவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. சாணி கொண்டு மெழுகுதல், சாணியில் பிள்ளையார் பிடித்தல்இ கோமியம் தெளித்தல் போன்ற நிகழ்வுகளிலும் காளைகள் தொடர்புபடுத்தப்படுகின்றன. குடும்பத்தின் பொருளாதார நிலை, சமூக மரியாதை மற்றும் வாழ்வாதாரம் ஆகியவற்றோடு காளைகள் தொடர்புடையவையாக உள்ளன. காளைகளை பராமரிப்பது ஒரு பொறுப்பாக மட்டுமன்றி குடும்ப மரபு மற்றும் அடையாளத்தின் ஒரு பகுதியாகவும் கருதப்படுகின்றது. தலைமுறைகளுக்கு இடையே காளைகளை பராமரிக்கும் அறிவும் அனுபவமும் பரிமாறப்படுவது பண்பாட்டு தொடர்ச்சியை உறுதிப்படுத்துகின்றது. காளைகள் குடும்ப உறுப்பினர்களைப் போல் கருதப்பட்டு செல்லப்பெயர்களால் அழைக்கப்படுவதும், குடும்பப் பெண்கள் அவற்றை பிள்ளைகள் போல் பராமரிப்பதும் குறிப்பிடத்தக்கது. காளைகளுக்கு மணி, வெள்ளிச் சங்கிலி அணிவித்து அழகுபாரக்;கும் நிகழ்வுகளும் உண்டு. காளைகள் இறத்துவிட்டால் அன்று துக்கநாளாக கடைப்பிடிக்கின்றனர். இறுதி மரியாதைசெலுத்தி தம் நிலத்திலே புதைப்பதுடன் அதன்; நினைவாக மரம் நடுகையுடன் சொந்தபந்தங்களிற்கு உணவும் வழங்குவர்.

காளைகளுக்கு நன்றி செலுத்தும் நோக்கில் “பட்டிப் பொங்கல்” போன்ற விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இந்நிகழ்வுகள் மனிதன் மற்றும் கால்நடைகளுக்கு இடையேயான பரஸ்பர சார்பு உறவை வெளிப்படுத்துகின்றன. காளைகளை அலங்கரித்து, அவற்றிற்கு சிறப்பு உணவுகள் அளித்து, வழிபாடு செய்வது போன்ற நடைமுறைகள் அவற்றின் சமூக மற்றும் ஆன்மீக முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. இத்தகைய திருவிழாக்கள் மக்கள் ஒன்றுகூடும் தளமாகவும், சமூக ஒற்றுமையை வலுப்படுத்தும் நிகழ்வாகவும் அமைகின்றன. கிராம மக்கள்,

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07042026.07*

குடும்பங்கள் மற்றும் உறவினர்கள் ஒன்றிணைந்து காளைகளை மையமாகக் கொண்டு கொண்டாடுவது, சமூக உறவுகளை வலுப்படுத்தும் பண்பாட்டுச் செயல்முறையாகக் காணப்படுகின்றது. இந்நிகழ்வுகள் தலைமுறைதோறும் பரம்பரை அறிவும் மரபுகளும் பரிமாறப்படும் வாய்ப்பாகவும் விளங்குகின்றன.

ஆன்மீக நம்பிக்கைகளில் காளைகள் தெய்வீக பாதுகாப்புடன் தொடர்புடைய உயிரினங்களாகக் கருதப்படுகின்றன. மக்கள் கதைகளிலும் ஜாதகக் கதைகளிலும் காளைகள் மனிதர்களை பாதுகாக்கும் உயிரினங்களாக வர்ணிக்கப்படுகின்றன. ஒரு ஜதீகக் கதையின் படி, எமன் ஒரு விவசாயி உயிரைப் பறிக்க வருவதற்கு முன் அதை உணர்ந்த காளைகள் விவசாயியை எச்சரித்து காப்பாற்றியதாகவும், இதனால் கோபமடைந்த எமன் அவற்றை உதைத்ததால் அன்றிலிருந்து மாடுகள் “அம்மா” என்ற ஒலியை மட்டுமே எழுப்புகின்றன என்ற நம்பிக்கையும் காணப்படுகின்றது. “நல்ல மாட்டுக்கு ஒரு சூடு”, “அடியாத மாடு படியாது” போன்ற பல பழமொழிகளும்; உள்ளன.

காளைகளைப் போற்றும் நடைமுறைகள் இயற்கையுடனான மனிதனின் உறவையும் பிரதிபலிக்கின்றன. மனித வாழ்வில் கால்நடைகளின் பங்களிப்பை அங்கீகரித்து அவற்றிற்கு நன்றி செலுத்தும் மனப்பான்மையானது சுற்றுச்சூழல் மற்றும் உயிரினங்களின் பரஸ்பர சார்பை உணர்த்துகின்றது. இத்தகைய அணுகுமுறை பாரம்பரிய தமிழர் வாழ்வியலில் காணப்படும் இயற்கை மையப்போக்கின் வெளிப்பாடாகக் கருதப்படுகின்றது.

**சவாரிக் காளைகள்**

இலங்கையைப் பொருத்தவரையில், இந்தியாவுடன் ஒப்பிடுகையில் மாட்டினங்களின் வகைகள் குறைவாகவே காணப்படுகின்றன. இருப்பினும், தற்போதுள்ள மாட்டினங்களில் பெரும்பாலானவை இந்திய துணைக்கண்டத்திலிருந்து கொண்டுவரப்பட்ட இனங்களாகக் கருதப்படுகின்றன. இதற்கான வரலாற்றுச் சான்றாக வட இலங்கையின் காங்கேசந்துறை என்ற துறைமுகப் பெயர் விளங்குகின்றது. இந்தியாவில் இருந்து காங்கேயம் மாடுகள் இத்துறைமுகம் வழியாக கொண்டு வரப்பட்டதாக கிராமிய மரபுக் குறிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. இதன் மூலம் இலங்கை மற்றும் தென்னிந்தியாவுக்கிடையேயான கால்நடை பரிமாற்றம் தொன்மையானது என்பதை உணர முடிகின்றது. மாட்டினங்களுக்கு விஞ்ஞான ரீதியான வகைப்பாடுகள் இருந்தாலும் கிராமப்புற மக்களின் அன்றாடப் பயன்பாட்டில் பல்வேறு பேசுபெயர்கள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. “ஊர் இனம்”, “கேப்பை”, “வடக்கன்”, “வன்னி”, “கிடாயன் இனம்”, “கலப்பு இனம்” போன்ற பெயர்கள் மாட்டினங்களின் தன்மைகளையும் பிரதிபலிக்கின்றன. இப்பெயர்கள் உயிரியல் அடிப்படையை விட சமூக மற்றும் பண்பாட்டு அடையாளங்களோடு தொடர்புடையவையாக இருப்பது குறிப்பிடத்தக்கது. காளைகளின் நிறம், உடல் அமைப்பு, மற்றும் செயல்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் அவற்றிற்கு தனிப்பட்ட பட்டப்பெயர்களும் வழங்கப்படுகின்றன. “பம்பர் சோடி”, “பூச்சியன்”, “கொம்பன்”, “கட்டையன்”, “சிவளை”,

“சந்தனக்கழுத்தன்”, “மயிலை”, “மாவெள்ளை”, “சருகுபுளி”, “வெறியன்” போன்ற பெயர்கள், காளைகளின் தனிச்சிறப்புகளை வெளிப்படுத்துகின்றன. இவ்வகைப் பெயரிடல் முறைகள், மனிதர்கள்-காளைகள் உறவின் நெருக்கத்தையும், பண்பாட்டு உரையாடலையும் எடுத்துக்காட்டுகின்றன.

சவாரிக்கான காளைகள் தெரிவு செய்யப்படும் செயல்முறை மிகவும் திட்டமிட்டதாக அமைகின்றது. பல பண்ணையாளர்கள் சவாரிக்காகவே பசுக்களை வளர்த்து நாம்பன் கன்றுகளை விற்பனை செய்கின்றனர். காளைகள் இளம் கன்றுகளாக இருக்கும்போதே அவற்றின் திறன்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. காளைகளின் பரம்பரைச் சிறப்பு, நிறம், நடைத் திறன், வேகம், சுழி அமைப்பு, மற்றும் கொம்பின் அமைப்பு போன்ற அம்சங்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. ஏறுசுழி, இறங்குசுழி அதிகம் கவணிக்கப்படும். சவாரிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் காளைச் சோடிகளில் இரு காளைகளும் ஒரே மாதிரியான தோற்றத்தைக் கொண்டிருப்பது விரும்பத்தக்கதாகக் கருதப்படுகின்றது. இது போட்டி நேரத்தில் ஒத்திசைவு மற்றும் சமநிலையை உறுதிப்படுத்துகின்றது. கன்றுகள் ஒரு குறிப்பிட்ட வயதை அடைந்த பின்னர் அவற்றிற்கு மூக்கணாங்கயிறு குத்தப்படுவது வழக்கமாகும். இதன் மூலம் காளைகளை கட்டுப்படுத்துதல் எளிதாகின்றது. தொடர்ந்து இளமைப் பருவம் அடைந்ததும் குறியிடல் மற்றும் காது குறைத்தல் போன்ற செயல்முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிலர் தமது சவாரிக் காளைகளுக்கு இத்தகைய செயல்களை மேற்கொள்ளாமலும் வளர்க்கின்றனர். காளைகளுக்கு குறியிடும் மரபு தமிழர்களிடையே தொன்மையான ஒன்றாகும். இக்குறிகள், பண்டைய காலங்களில் பயன்படுத்தப்பட்ட பானைக் குறியீடுகளுக்கு ஒத்த வடிவமைப்பைக் கொண்டிருப்பதுடன், காளையின் உரிமையாளரை அடையாளப்படுத்தும் ஒரு முறையாகவும் விளங்குகின்றன. சில சமயங்களில், உரிமையாளரின் பெயரின் முதல் எழுத்தும் குறியீடாக இடப்படுகின்றது. இத்தகைய குறியிடும் நிகழ்வுகள் பொதுவாக வைகாசிப் பொங்கல் அல்லது பௌர்ணமி நாட்களில் நடைபெறுவது, அவற்றின் சடங்கு மற்றும் சமய முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது.

காளைகளின் வயதினைப் பொறுத்து குறிகளின் தன்மை மாறுபடும். அதேவேளை, வயதிற்கு வந்த காளைகளுக்கு விதை நீக்கமும் மேற்கொள்ளப்படுகின்றது. இச்செயல்கள் காளைகள் உரிமையாளரின் கட்டுப்பாட்டிற்குள் இருந்து ஒழுங்காக நடந்து கொள்ளும் என்ற நோக்கில் மேற்கௌ;ளப்படுகின்றன. இதன் மூலம் மனிதர் மற்றும் கால்நடை இடையேயான பண்பாட்டு ஒழுங்குமுறை வெளிப்படுகின்றது. சவாரிக்கான காளைகளுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் மிகவும் ஒழுங்குமுறையுடனும் கட்டுப்பாடுடனும் அமைகின்றன. கடல் நீரில் நீந்தச் செய்தல், வண்டியில் பூட்டி நடைப்பயிற்சி அளித்தல், வெறும் நுகத்தைப் பூட்டி நடைப்பயிற்சி மற்றும் ஓட்டப்பயிற்சி போன்றவை காளைகளின் உடல் வலிமையையும் சகிப்புத்தன்மையையும் அதிகரிக்கின்றன. இத்தகைய பயிற்சிகள், போட்டிகளில் காளைகள் சிறந்த செயல்திறனை வெளிப்படுத்த உதவுகின்றன. உணவுமுறைகளிலும் சிறப்பு கவனம் செலுத்தப்படுகின்றது. வைக்கோல், உழுந்து,

கடலை, புல் போன்றவற்றுடன் நெல்லையும் அவித்து காளைகளுக்கு வழங்கப்படுகின்றது. அத்துடன் முட்டை, நல்லெண்ணையும் கொடுக்கப்படுகின்றன. இதன் மூலம் அவற்றின் உடல் வலிமை பராமரிக்கப்படுவதோடு, அதிகப்படியான உடல் எடை ஏற்படாமலும் கட்டுப்படுத்துகின்றது. குதிரையைப் போன்ற சுறுசுறுப்பான உடல் அமைப்பை பராமரிப்பது முக்கியமாகக் கருதப்படுகின்றது. ஏனெனில் அதிக உடல் எடை காளைகளின் வேகத்தையும் செயல்திறனையும் குறைக்கும்.

**மாட்டுவண்டிச் சவாரி**

வட இலங்கையைப் பொருத்தவரையில், மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகள் கோயில் நிர்வாகத்தினர், இளைஞர் அமைப்புகள் மற்றும் பிரதேச சபைகளால் திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்படும் பாரம்பரிய நிகழ்வாகக் காணப்படுகின்றன. இப்போட்டிகள் வெறும் பொழுதுபோக்கு அல்லது விளையாட்டு நிகழ்வுகளாக மட்டுமல்லாமல், சமூகத்தின் பண்பாட்டு அடையாளத்தையும், சமூக ஒற்றுமையையும் வெளிப்படுத்தும் முக்கிய நிகழ்வாக அமைகின்றன. தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, கோயில்திருவிழாக்கள் மற்றும் ஆண்டுவிழாக்கள் போன்ற தினங்களையொட்டி இப்போட்டிகள் நடத்தப்படுவதும் அவற்றின் சமூகவியல் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது. சவாரிகள் பொதுவாக கிராமங்களின் எல்லைப்புறங்களில் அமைந்துள்ள சமதள தரிசு நிலங்களில் நடைபெறுகின்றன. இதனை சவாரத்திடல்இ விடந்தை என பல பெயர்களில் அழைப்பர். நீர்வேலி, மட்டுவில், கந்தரோடை, புளியம்பொக்கனை, வட்டுக்கோட்டை, விசுவமடு, சங்கரத்தை, நவாலி மற்றும் மன்னார் போன்ற பகுதிகளில் இப்போட்டிகள் சிறப்பாக நடைபெறுவதுடன், அவை அப்பகுதி மக்களின் வாழ்வியலோடு ஆழமாகப் பிணைந்துள்ளன. போட்டிகள் பொதுவாக ஞாயிற்றுக்கிழமை மதிய வேளைகளில் ஆரம்பமாகி மாலைநேரம் முடிவடைகின்றன. போட்டி நடைபெறும் நாளில், காலை முதலே பங்கேற்பாளர்களும் பார்வையாளர்களும் பல்வேறு இடங்களிலிருந்து திரண்டு வருவது வழக்கமாகும். காளைகள் போட்டி நடைபெறும் இடங்களிற்கு வாகனங்களில் ஊர்வலமாக அழைத்துவரப்படுவதுடன் காளைகளை போட்டிக்காகத் தயார் செய்யப்படுவதில் சிறப்பு கவனம் செலுத்தப்படுகின்றது. அவற்றிற்கு சத்தான உணவுகள் வழங்கப்பட்டு உடல் வலிமை மற்றும் உற்சாகம் அதிகரிக்கப்படுகின்றன.

போட்டிச் சவாரித்திடல் சுமார் 400 மீட்டர் நீளமுடைய சமதளப் பாதையாக அமைந்துள்ளது. காளைமாட்டுச் சோடிகள் அவற்றின் வயது, திறமை, அனுபவம் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு A,B,C,D,E என ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. காளைகளின் பற்களின் தன்மையினை ஆராய்ந்தே அவற்றின் வயது கணிக்கப்படுவது சிறப்பாகும். ஒருசோடி காளைகள் ஒரே ஒரு பிரிவில் மட்டுமே பங்கேற்க அனுமதிக்கப்படுகின்றன. இத்தகைய வகைப்படுத்தல் போட்டிகளில் சமநிலையையும் நியாயத்தன்மையையும் உறுதிப்படுத்துகின்றது. போட்டிகள் பொதுவாக மூன்று சுற்றுகளாக நடைபெறுகின்றன.

காளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப சுற்றுகளின் எண்ணிக்கை மாறுபடும். காளைகளின் வேகம் மட்டுமின்றி, அவற்றை இயக்கும் பாகனின் திறமை, அனுபவம் மற்றும் கட்டுப்பாட்டுத் திறனும் வெற்றியை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளாகக் காணப்படுகின்றன.

போட்டி ஆரம்பிக்கும் பொழுது காளைகள் ஆரம்ப கோட்டில் நிலைநிறுத்தப்பட்டு வண்டியுடன் இணைக்கப்படுகின்றன. இந்தச் செயல் "பூட்டாங்கயிறு கட்டல்", ஃ "பூட்டுக்கட்டல்" என அழைக்கப்படுகின்றது. இது தொழில்நுட்பத் திறமை மற்றும் அனுபவம் தேவைப்படும் ஒரு செயல்முறையாகும். இதற்கு திறமையானவர்கள் தனித்துவமாக கருதப்படுவதுடன் அவர்களைக் கொண்டு மாட்டை வண்டிலுடன் இணைப்பர். பின்னர் ஆரம்ப கோடு சரிபார்க்கப்படும். பொறுமையினை இழந்து நடுவரின் அறிவிப்புக்கு முன்பு தொடக்க எல்லையினை தாண்டும் காளைகளிற்கு மூன்று சந்தர்பங்கள் வழங்கப்படுதுடன் நான்காவது தடவையும் மீறினால் அவ் காளைகள் போட்டியிலிருந்து விலக்கப்படும். நடுவரால் வெள்ளைக் கொடி அசைக்கப்பட்டவுடன் வண்டிலில் அமர்ந்திருக்கும் பாகனின் அசைவிற்கேற்ப காளைகள் வேகமாக பாயத்தொடங்கும். போட்டி நடைபெறும் பொழுது இருபுறங்களிலும் திரண்டிருக்கும் பார்வையாளர்களின் உற்சாகக் குரல்கள் மற்றும் கரகோசங்கள் போட்டியின் தீவிரத்தையும் சுறுசுறுப்பையும் அதிகரிக்கின்றன. ஒவ்வொரு பிரிவுகளிலும் எல்லைக் கோட்டை முதலில் அடையும் காளைகள் வெற்றியாளர்களாக அறிவிக்கப்படுகின்றன. அத்துடன்; அடுத்த சுற்றுக்கும் முன்னேறுகின்றன. முதல் சுற்றில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைகளை அடையும் காளைச் சோடிகள் இரண்டாம் சுற்றுக்கு செல்லும். இரண்டாம் சுற்றில் முதலாம் இடத்தினைப்பெறும் காளைகளே இறுதிச்சுற்றுக்கு முன்னேறும். இறுதிச் சுற்றில்; முதல் மூன்று இடங்களுக்குரிய தெரிவுகள் இடம்பெறும். இவ்வாறு ஐந்து பிரிவுகளிலும் வெற்றியாளர்கள் அறிவிக்கப்படுதுடன் வெற்றி பெறும் பங்கேற்பாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படுவது வழக்கமாகும். இத்தகைய அங்கீகாரங்கள், பங்கேற்பாளர்களின் உற்சாகத்தையும் போட்டியின் மதிப்பையும் உயர்த்துகின்றன. காளைகளின் பெறுமதியும் பல மடங்குகளால் அதிகரிக்கும். போட்டிகள் முடிந்த மறுநாள் காளைகளின் உடல்நிலையினை சீர்நிலைப்படுத்த அவை கடல் நீரில் குளிப்பாட்டப்படுகின்றன.

இன்றைய நிலையில் மாட்டுவண்டிச் சவாரியானது வட இலங்கையின் ஏனைய பாரம்பரிய விளையாட்டுக்களை விட சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஆரம்பகாலங்களில் விவசாயிகள் தங்கள் உழவு மாடுகளை கொண்டு குறுகிய அளவில் தார் பாதைகளில் மட்டுமே இந்த விளையாட்டில் ஈடுபட்டனர். ஆனால் இன்று அரச உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிநாடுகளில் வசிப்பவர்களும் இதில் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர். சவாரிக்காகவே பல தனித்துவமான காளைகளை வளர்த்து வருகின்றனர் அவை பல இலட்சம் மதிப்புடையதாகக் காணப்படுகின்றன. அத்துடன் சவாரிக்கென தனித்துவமான இடங்கள் தெரிவுசெய்யப்பட்டு செப்பனிடப்பட்டு போட்டிகள் இடம்பெறுகின்றன.

வட இலங்கை மாட்டுவண்டிச் சவாரிக்கான சங்கம் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட காளைகளே போட்டிகளில் பங்கேற்க அனுமதிக்கப்படுகின்றன. மேலும் பல கட்டுப்பாடுகளும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

ஆரம்பகாலங்களில் மாடுகளுக்கு மது கொடுத்தல், ஓடும் போது ஊசி கொண்டு குத்துதல் போன்ற கொடூரமான செயல்கள் இடம்பெற்றன. ஆனால் இன்று அவை முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளன. காளைகளின் நலனை கருத்தில் கொண்டு போட்டிகள் நடத்தப்படுகின்றன. அத்துடன் போட்டி விதிமுறைகளும் முறையாகப் பின்பற்றப்படுகின்றன.

நவீன ஊடகங்களின் வருகையும் இந்த விளையாட்டிற்கு முக்கிய பங்களிப்பை வழங்குகின்றது. புதிய ஊடகங்களின் வாயிலாக வட இலங்கையின் மாட்டுவண்டிச் சவாரி உலகளாவிய அளவில் அறியப்படுகின்றது. பல புலம்பெயர் தமிழர்களும் அதிக ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர். பல காளைகளின் திறமைகள் பதிவுசெய்யப்படுவதால் சிறந்த காளைகளுக்கான உலகளாவிய இரசிகர்களும் உருவாகியுள்ளனர்.

இன்றைய இளைஞர்களிடையே பாரம்பரிய விளையாட்டுகள் குறித்த விழிப்புணர்வு அதிகரித்து வருகின்றது. வட இலங்கையில் கிளித்தட்டு, மாட்டுவண்டிச் சவாரி போன்ற விளையாட்டுகள் முக்கிய இடம் பெறுவதற்கு இளைஞர்களின் பங்களிப்பு முக்கிய காரணமாகும். பாரம்பரியங்களை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இவை நல்ல பொழுதுபோக்காகவும் சமூக ஒற்றுமையை வளர்க்கும் கருவியாகவும் விளங்குகின்றன. இதன் மூலம் இளைஞர்கள் சட்டவிரோத செயல்களிலிருந்தும், கையடக்கத் தொலைபேசிகளின் அடிமைத்தனத்திலிருந்தும் விலகி பாரம்பரிய நோக்கில் செல்கின்றனர். அத்துடன், காளை பராமரிப்பு, வண்டில் தயாரிப்பு, விளம்பரப்படுத்தல் போன்ற துறைகளில் வேலைவாய்ப்புகளும் உருவாகின்றன. வட இலங்கையின் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கும் மாட்டுவண்டிச் சவாரி பங்களிப்பு அளிக்கின்றது. அதிகமான சுற்றுலாப் பயணிகள் இதனைப் பார்வையிட வருவது கவனிக்கத்தக்கது. சிறந்த விளம்பரப்படுத்தலால் இது மேலும் வளர்ச்சி அடைய வாய்ப்புள்ளது.

வட இலங்கையில் மாடுவளர்ப்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. பல கல்வியறிவு பெற்றவர்களும் மாடுவளர்ப்பு மற்றும் இயற்கை விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு மாட்டுவண்டிச் சவாரி மீதான ஈர்ப்பும் ஒரு முக்கிய காரணமாகும். மாட்டுவண்டிச் சவாரி சமூக மற்றும் கலாசார அடையாளத்தையும் வலுப்படுத்துகின்றது. கிராமப்புற மக்களின் வாழ்க்கை முறைகள், ஒற்றுமை உணர்வு மற்றும் பாரம்பரிய மதிப்புகள் ஆகியவை இவ்விளையாட்டின் மூலம் வெளிப்படுகின்றன. இது தலைமுறைகளுக்கு இடையேயான அறிவுப் பரிமாற்றத்திற்கும் வழிவகுக்கின்றது. மூத்தவர்கள் தங்கள் அனுபவங்களையும் நுணுக்கங்களையும் இளைஞர்களுக்கு பகிர்ந்து கொடுக்கின்றனர். சுற்றுச்சூழல் நட்பு விளையாட்டாகவும் மாட்டுவண்டிச் சவாரி கருதப்படுகின்றது. எரிபொருள் சார்ந்த இயந்திரங்களைப் பயன்படுத்தாமல், இயற்கையோடு இணைந்த வாழ்வியலை ஊக்குவிப்பதன் மூலம் இது நிலைத்த வளர்ச்சிக்கும் பங்களிக்கின்றது.

இன்றைய கல்வியாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் ஆய்வுகளும் மாடுகள் மற்றும் மாட்டுவண்டிச் சவாரியை மையமாகக் கொண்டு நடைபெற்று வருகின்றன. எதிர்காலத்தில் தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் அறிமுகப்படுத்தும் வாய்ப்புகளும் காணப்படுகின்றன. அந்த வகையில் மாட்டுவண்டிச் சவாரி தமிழர்களிடமிருந்து பிரிக்க முடியாத பாரம்பரிய

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.07*

விளையாட்டாகவும், பாரம்பரியத்தின் அடையாளமாகவும் திகழ்கின்றது.

**முடிவுரை**

வட இலங்கை தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டாக விளங்கும் மாட்டுவண்டிச் சவாரி வெறும் பொழுதுபோக்கு நிகழ்வாக மட்டும் அல்லாமல் ஆழமான வரலாற்று, சமூக மற்றும் பண்பாட்டு அடையாளங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு முக்கிய மரபாகும். தமிழர் வரலாற்றில் காளை மாடுகள் பொருளாதாரம், விவசாயம், சமயம் மற்றும் குடும்ப வாழ்க்கை ஆகிய அனைத்துத் துறைகளுடனும் நெருங்கிப் பிணைந்துள்ளன. இதன் தொடர்ச்சியாகவே மாட்டுவண்டிச் சவாரி போன்ற நிகழ்வுகள் உருவாகியுள்ளன. சங்ககாலம் தொடக்கம் நவீன காலம் வரை காளைகளின் பங்கு சமூகத்தில் நிலைத்திருக்கின்றது. அவை செல்வத்தின் அடையாளமாகவும், வீர உணர்வின் வெளிப்பாடாகவும், மனிதன் மற்றும் இயற்கை இடையேயான உறவின் சின்னமாகவும் விளங்குகின்றன. இந்நிலையில், மாட்டுவண்டிச் சவாரி கிராமிய வாழ்க்கை முறையையும், சமூக ஒற்றுமையையும், பாரம்பரிய மதிப்புகளையும் பிரதிபலிக்கும் ஒரு கலாசார வெளிப்பாடாகக் காணப்படுகின்றது. இவ்விளையாட்டு இளைஞர்களின் ஈடுபாட்டை அதிகரித்து, பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் ஒரு சமூக இயக்கமாகவும் உருவெடுத்து வருகின்றது. சுற்றுலாத்துறை வளர்ச்சி, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் ஊடகங்களின் ஆதரவு ஆகியவை இதன் பரவலை விரிவுபடுத்துகின்றன. அதேவேளை, மாடுகளின் நலனை கருத்தில் கொண்டு விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுவது அதன் நிலைத்த தன்மைக்கு உதவுகின்றது. நவீனமயமாதல் மற்றும் நகர்மயமாதல் காரணமாக பாரம்பரிய நடைமுறைகள் மாற்றமடைந்து வருகின்றன. இருப்பினும், மாட்டுவண்டிச் சவாரி தனது பண்பாட்டு அடையாளத்தையும் சமூக முக்கியத்துவத்தையும் தக்கவைத்துக் கொண்டு தொடர்ந்தும் நிலைத்து நிற்கும் திறன் உடையதாகும். அந்தவகையில் மாட்டுவண்டிச் சவாரி வட இலங்கை தமிழர்களின் வாழ்வியலோடு பிரிக்க முடியாத பாரம்பரியச் சின்னமாகவும், எதிர்காலத்திலும் பாதுகாக்கப்பட வேண்டிய முக்கிய கலாசார மரபாகவும் கருதப்படுகின்றது.

**உசாத்துணை நூல்கள்**

[1]. ராஜன்,கா., 2012. சங்க இலக்கியமும் அகழ்வாய்வும். கொழும்புத் தமிழ்ச் சங்கம், இலங்கை.

[2]. சிவத்தம்பி.கா., 2003, பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி., மக்கள் வெளியீடு சென்னை.

[3]. 3.ஜெய்கணேஷ்.பா..2007.மகாலட்சுமி.ம., மகேஸ்வரி.சு.. "குறிஞ்சி சங்க இலக்கியம் : வரலாறு - மானிடவியல் - தொல்லியல், பரிசல், சென்னை-106.

[4]. சசிவல்லி.வி.சி..1989.பண்டைத் தமிழர் தொழில்கள். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்., சென்னை.

[5]. புஷ்பரட்ணம்.ப, 2017, இலங்கைத்தமிழர் ஒரு சுருக்கவரலாறு, தமிழ் கல்விச் சேவை சுவிற்சலாந்து.

[6]. புஷ்பரட்ணம்.ப, 2002, இலங்கைத் தமிழரின் பண்டையகால நாணயங்கள், பாவணி பதிப்பகம் யாழ்ப்பாணம்.

[7]. சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம், 1986, தஞ்சைப் பல்கலைக் கழகம்.

[8]. பிள்ளை,கே.கே..2000.தமிழக வரலாறும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

[9]. இராகவையங்கர்.ரா. 1951, பட்டினப்பாலை ஆராய்ச்சியும் உரையும். தமிழ்நாடு அச்சகம். மதுரை..

**Works Cited**

[1]. **Rajan, K.** *Sangam Literature and Archaeology (Sanga Ilakkiyamum Akalvayvum).* Colombo Tamil Sangam, 2012.

[2]. **Sivathamby, K.** *Ancient Tamil Society: Towards a Historical Understanding (Pandai Tamizhar Samoogam: Varalarru Purithalai Nokki).* Makkal Veliyeedu, 2003.

[3]. **Jayaganesh, P., M. Mahalakshmi, and S. Maheswari.** *Kurinji Sangam Literature: History - Anthropology - Archaeology (Kurinji Sanga Ilakkiyam: Varalaru - Manidaviyal - Tholliyal).* Parisal, 2007.

[4]. **Sasivalli, V. C.** *Occupations of Ancient Tamils (Pandai Tamizhar Thozhilgal).* International Institute of Tamil Studies, 1989.

[5]. **Pushparatnam, P.** *A Brief History of Sri Lankan Tamils (Ilangai Tamizhar: Oru Surukka Varalaru).* Tamil Education Service Switzerland, 2017.

[6]. **Pushparatnam, P.** *Ancient Coins of Sri Lankan Tamils (Ilangai Tamizharin Pandaiya Kaala Nanayangal).* Bavani Pathippagam, 2002.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.07*

[7]. **Tamil University.** *Encyclopedia of Sangam Literature (Sanga Ilakkiya Porutkalanjiyam).* Thanjavur University Press, 1986.

[8]. **Pillay, K. K.** *History and Culture of Tamil Nadu (Tamizhaga Varalarum Panpadum).* International Institute of Tamil Studies, 2000.

[9]. **Raghava Iyengar, R.** *Pattinappalai: Research and Commentary (Pattinappalai Araichiyum Uraiyum).* Tamil Nadu Press, 1951.

Tamilmanam